Department of Education, Sabaragamuwa Province/ Weekly School Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

**சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்**

**வாராந்தப் பாடசாலை**

பாடம் : புவியியல் | தரம் 09

முதலாம் வாரம் | ஆக்கம் : V.R.ரஜீவ்நாத் (இ/நிவி/கலல்எல்ல தமிழ் வித்தியாலயம்)

## அலகு 02 : இலங்கையின் நிலத்தோற்றம்

செயற்பாடு : **இலங்கையின் பௌதீக நிலத்தோற்றத்தின் பிரதான தரைத்தோற்ற வலயங்களை இனங்கண்டு கொள்வோம்.**

அறிமுகம் : புவி வரலாற்றினுள் நீண்ட காலமாக இடம்பெற்ற புவி செயற்பாடுகளினுடைய விளைவாக நிர்மாணிக்கப்படுகின்ற பல்வேறு சிக்கலான நிலவமைப்புக்களை இலங்கையின் நிலத்தேற்றத்தினுள்ளும் இனம் காண முடியும். இவை உயரத்தை அடிப்படையாகக் கொண்டு மூன்று நிலத்தோற்ற வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

தர உள்ளீடுகள் : புவியியல் பாடநூல், பயிற்சிப் புத்தகம், மாதிரி இலங்கை புறவுருவப்படத்தாள், எழுதுகருவிகள், நிறப் பென்சில்கள்.

செயற்பாடு தொடர்பான மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்.

படிமுறை 1 : தரம் 09 புவியியல் பாடநூலின் 28ஆம் பக்கத்தினை தெழிவுற வாசிக்கவும்.

படிமுறை 2 : தரப்பட்டள்ள வினாக்களை உமது பயிற்சிப் புத்தகத்தில் பிரதி செய்க.

: உமது பாடநூலில் 28ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ள இலங்கையின் தரைதோற்ற வேறுபாட்டைக் காட்டும் உருவினை துணையாகக் கொள்க.

பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

01.இலங்கையின் தரைத்தோற்ற வலயங்கள் மூன்றினையும் பெயரிடுக.

02.அட்டவணையை பூரணப்படுத்துக.

| தரைத்தோற்ற வலயம் | | கடல் மட்டத்திலிருந்து உயர வேறுபாடு |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |

03. இலங்கையின் தரைத்தோற்ற வேறுபாட்டினைக் காட்டும் வகையில் புறவுருவப்படத்தில் நிறந்தீட்டி வலயத்தினை பெயரிட்டுக் காட்டுக.

பின்தொடர் பயிற்சி :

கார்ட்போட் அட்டைகளைப் பயன்படுத்தி, இலங்கையின் தரைதோற்ற வேறுபாட்டினை காட்டும் வகையிலான முப்பரிமான இலங்கை புறவருவப்பட மொன்றினைத் தயாரிக்குக.